7th August 1965]

என்று மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யப்போவதாக இங்கே அமைச்சர் அவர்கள் முன்பு தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அம்மாதிரி எழுதவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்முடைய கருத்தை எழுதித்தான் தெரிவிக்கவேண்டும் என்றில்லை. நாம் பலரை சந்திக்கின்றோம், மத்திய அரசாங்கத்தின் இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரை சந்திக்கின்றோம். ஃபைனான்ஸ் மினிஸ்டரை சந்திக்கின்றோம், இவர்களிடம் கலந்து பேசும்போது, இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Aluminium Smelter Units

* 103 *Q.*—Sri K. NARAYANASWAMI PILLAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up aluminium smelters in the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) An aluminium Smelter Unit has already been set up in the private sector by the Madras Aluminium Company at Mettur with a capacity of 10,000 tons per annum initially and 20,000 tons ultimately. There is at present no proposal to set up a unit in the public sector.

திரு. வை. சங்கரன்: இந்த அலுமினிய தொழிற்சாலை வைப்பதற்கு மேட்டூரை தேர்ந்தெடுத்ததற்கு என்ன காரணம்? அதற்காக என்ன தகுதி இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்? இதற்கான விசேஷ காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதை வைத்தவர்கள் அந்த இடத்தை தேர்ந்தெடுத்தார்கள்.

Alloy Steel Production Unit

* 104 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up an Alloy Steel Production Unit in the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) & (*b*) There is no proposal to set up in the Public Sector a separate Alloy Steel Production Unit in the State, but the Salem–Neyveli Steel Plant proposed to be set up in this State envisages the production of 50,000 tons of low alloy constructional steel, 50,000 tons of spring steel and 35,000 tons of low alloy high tensile structural steel.